பஞ்சாலைத் தொழிலின் இரண்டாம் நூற்றாண்டு. Regd. No. M 6207

கிராமோதயம்

823
2.7

CONNEMARA PUBLIC LIBRARY
3 - JAN 1956
MADRAS

ஆசிரியர் : ப. கோவிந்தசாமி

(அகில பாரத சர்க்கா சங்கத்தின் மாதமிருமுறை பத்திரிகை)

மலர் 2 திருப்பூர் - மே 15 * 1954 * விலை 1 அணா இதழ் 14

மறந்துபோன தமிழகத் தியாகியின் மறைவு!

ஹரிஜன் பத்திரிகையில் அடிக்கடி பொருளாதார அரசியல் பிரச்னைகளைப்பற்றி மிகவும் கம்பீரமான முறையில் எழுதிவந்த திரு எம். பி. டி. ஆச்சாரியாவின் பெயர் சர்வோதயவாதிகளுக்கும், பழைய புரட்சிவாதிகளுக்கும் புதிதல்ல.

சென்ற 50 வருட காலமாக ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் ஊர் ஊர் ஆக சென்று இந்திய விடுதலைக்காக பிரசாரம் செய்துவந்த ஒரு புரட்சி வீரர் யாருக்கும் தெரியாமல், யாராலும் கவனிக்கப்படாமல், நிர்க்கதியான நிலையில் பம்பாயிலுள்ள பாடியா ஆஸ்பத்திரியில் சென்ற மார்ச் 20-ம் தேதி உயிர் நீத்தார்! அந்த சிறந்த தேசபக்தரின் ஈமச் சடங்குகளை கவனிப்பதற்குக்கூட அருகில் யாருமில்லை!!

நமது தேசத்தின் சமீபகால சரித்திரத்தை உருவாக்கிய தியாகியொருவருக்கு இறுதி மரியாதை செலுத்துவதற்குக்கூட சுதந்திர இந்தியாவில் யாரும் இருக்கவில்லை என்பதை கேள்விப்பட்டு நாம் தலைகுனியாமலிருக்க முடியவில்லை!

திரு எம். பி. டி. ஆச்சாரியா தாத்வீக அராஜகவாதி. அவர் காந்தியடிகளின் சர்வோதய லட்சியத்திலும், அஹிம்சையிலும் நம்பிக்கை வைத்திருந்தார். அவர் 1908 ஆண்டில் தனது பள்ளிப் பிராயத்திலேயே இந்தியாவை விட்டு வெளியேறினார். அவர், காலஞ்சென்ற திரு வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரியார் கும்பகோணம் உயர்நிலைப் பள்ளி முதன்மை ஆசிரியராக இருந்தபொழுது, அங்கு கல்வி பயின்றவர். 1906-ம் ஆண்டில் சென்னையில் அவரும், கவிக்குயில் பாரதியாரும் சேர்ந்து ஒரு பத்திரிகை நடத்திவந்தனர். திரு திலகரின்பால் அவருக்கு ஏற்பட்ட பற்றுதல் காரணமாக சூரத்தில் நடந்த காங்கிரசின் தீவிரவாதிகள் மகாநாட்டிற்கு அவரும் ஒரு பிரதிநிதியாக சென்றார்.

அவர் சுமார் 30 ஆண்டுகள் வெளிநாடுகளில் சுற்றி அலைந்த பின்னர்தான் தாய்நாடு திரும்ப முடிந்தது. தாய்நாட்டின் தோள்வலிமிக்க தீரப் புதல்வர்களில் ஒருவர் தனது கடைசி நாட்களை வறுமையிலும், பிணியிலும் யாராலும் கவனிக்கப்படாமல் கழித்து உயிர் நீத்தார். அவருக்கு எமது கடைசி மரியாதையை செலுத்துகிறோம்.

— ஆசிரியர்

இமயத்தின் அழைப்பு!!

இமயத்தில் ஒரு நாள்

30—1—'48 — காந்தியடிகள் மறைந்த நாள். அன்றே என் வாழ்க்கையிலும் மறக்க முடியாத சில அனுபவங்கள் நிறைந்த தினம். நான் எனது நண்பர் ஒருவருடன் இமயப் பிரதேசத்தில் 'நாகதாத்' என்ற சிற்றூருக்குச் சென்றுகொண்டிருந்தேன். இரவுக்குள் அங்கு சென்றுவிடலாம் என்று நினைத்து புறப்பட்டோம். ஆனால் பாதி வழியிலேயே இரவாகிவிட்டது. மிகுந்த சாகசத்துடன் சிறிது தூரம் முன்னேறினோம். ஆனால் வேறு வழியின்றி திரும்பி இடையில் ஒரு கிராமத்திலேயே தங்குவதென்று தீர்மானித்து திரும்பினோம். வழி மறந்த காரணத்தால் நாங்கள் எண்ணியபடி பரிச்சயமுள்ள கிராமத்திற்குப் பதில் வேறு ஏதோ முற்றிலும் முன்பின் தெரியாத ஊரில் சென்று சேர்ந்தோம்.

கடும் குளிரில் முன்பின் தெரியாத கிராமம்

குளிர் காலத்தின் கடுமையான குளிர். கிராமத்தின் வீட்டுவாயில்கள் எல்லாம் அடைத்திருந்தது. ஆங்காங்கு நெருப்பின் மங்கிய ஒளி வீசுவதையும் கண்டோம். முன்பின் தெரியாத என்னருகில் சிலர் குழுமினர். ஆனால் பரிச்சயமில்லாத ஒருவருக்கு இரவு தங்குவதற்கு இடம் கிடைப்பது அசாத்தியமாகவே தென்பட்டது.

வரவேற்பு

இதற்குள் ஒரு பெண்ணின் குரல் கேட்டது. "இவர் சாஸ்திரியார்! இவரை நம் வீட்டிற்கு அழைத்து வாருங்கள்!" அவள் வீட்டிலிருந்தவர்கள் முன்வந்து என்னை அழைத்துச் சென்றனர்.

மரத்தினால் செய்த ஒரே அறையுடைய சிறு வீடு. அனல் மூட்டி அதன் வெப்பத்தால் குளிர் காய்ந்துகொண்டே சிலர் தங்கள் வேலைகளைச் செய்துகொண்டிருந்தனர்.

சோகக் கதை

ஆட்டின் தோலால் தன்னை மூடிக்கொண்டு, அந்த நோயுற்ற பெண்மணி சரீரசிரமத்தாலும் மனவேதனையாலும் துன்பந்துடித்துக் கொண்டிருந்தாள். கேட்டபொழுது அவள் சமீபத்தில் "நாகதாத்"தில் நடைபெறும் எமது கஸ்தூரிபா சென்டரிலிருந்து மருந்து வாங்க ஒன்றிரண்டு முறை சென்றதாகவும், அங்கு என்னை கண்டுள்ளதாகவும் கூறினாள். அவள் தனது வாழ்க்கை வரலாறுகள் அனைத்தையும் என்னிடம் விம்மி விம்மி அழுதுகொண்டே எடுத்துரைத்தாள்.

நான் அன்று அவளிடம் கேட்ட கதை அவள் இதயத்துடிப்பை மட்டிலும் காட்டவில்லை. அந்த சோகக் கதை இமயப் பிரதேசத்திலுள்ள பெண்களின் நிலையையே குறிப்பிடுகிறது.

ஐந்து கணவர்களின் ஒரே மனைவி

அவள் ஐந்து புருஷர்கள் மணந்துள்ள ஒரே ஸ்திரீ!! நோய்வாய்ப்பட்டிருந்த பொழுதிலும், அவள் இடைவிடாது உழைத்து, தனது ஐந்து கணவர்களுக்கும் இதர குடும்பத்தினர்களுக்கும் வாழ்க்கைத் தேவைகளுக்காக சம்பாதித்து வந்தாள்! அப்படியிருந்தும் இந்த ஐந்து கணவர்

(தொடர்ச்சி 63-ம் பக்கம் காண்க.)

கிராமோதயம்

மே 15 1954

பஞ்சாலைத்தொழிலின் இரண்டாம் நூற்றுண்டு

பஞ்சாலைகளின் நூற்றுண்டு விழா

இந்தியாவின் முக்கியமான கைத்தொழில்களில் இன்று பஞ்சாலைகள் முதன்மை பெற்றிருக்கிறது. அவைகள் நமது தேசத்தில் தோன்றி இன்று 100 ஆண்டு பூர்த்தியாகிறது. அதையொட்டி அத்தொழில் தன் நூற்றுண்டு பூர்த்தியை கொண்டாடுகிறது. இந்த ஒரு நூறுண்டுகளிலும் இதை முன்துடர்ந்த நூறுண்டிலுமாக நமது தேசத்தின் நேர்த்தியான கைநூல், கைராட்டைத் துணி குற்றுயிராயிற்று. முதலில் இவைகளை அழித்து இங்கிலாந்து தனது கைத்தொழில் புரட்சியையும், லங்காஷையர் துணிக்கைத்தொழிலையும் எழுப்பியது. சென்ற நூற்றுண்டில் பொதுமக்களின் சுதேசி உணர்ச்சியின் ஆதாரத்தின் மீது, இந்த பிரிட்டிஷ் துணி தொழிலதிபர்களும், அந்நிய அரசாங்கமும் அனுமதித்த அளவுக்கு நம் நாட்டு பஞ்சாலைத்தொழில் வளர்ச்சி பெற்று வந்துள்ளது.

இரண்டாம் நூற்றுண்டு

இவ்வாண்டு முதல் இரண்டாம் நூற்றுண்டு ஆரம்பமாகிறது. இந்த புது நூற்றுண்டு நமது பொருளாதார கைத்தொழில் துறைகளில் புரட்சிகரமான முன்னேற்றங்களைக் காணும். இம் முன்னேற்றங்களைக் குறித்து சமீபத்தில் ஸ்ரீ ஜி. டி. பிர்லா அவர்கள் அகில இந்திய வர்த்தகசபைகளின் பெடரேஷனில் பேசுகையில் குறிப்பிடும்பொழுது கீழ்க்கண்டவாறு பொருள்படும்படி பேசினுர்.

இந்தியர் உரிமைகளும்: அந்நியர் உரிமைகளும்

"சென்ற நூற்றுண்டில் நமது கைத்தொழில் பிரச்னைகளில் அந்நியர்கள் பாத்தியதைகளும், இந்தியர்கள் பாத்தியதைகளும் என்று இரு பிரிவுகளே இருந்துவந்தன. நாம் அனைவரும் இந்தியர்கள் உரிமை என்ற கோஷத்தை எழுப்பி அதன் கீழ் ஒன்றுபட்டு வந்தோம். இன்று தேசம் விடுதலை அடைந்து விட்டபடியால் இது மாறிவிட்டது. இன்று இந்திய பாத்தியதைகள் என்ன என்றே சந்தேகமெழுகிறது."

பஞ்சாலைகளின் சாதனைகள்—(Rationalization)

பஞ்சாலைத் தொழில் இதற்கு பதிலளிக்க முடியாது. அது மேல் நாடுகளில் தோன்றியுள்ள முதலாளித்துவ சமூகப் பொருளாதார அடிப்படையில் வளர்ந்துவரவே முற்படுகிறது. ஒரு நூறுண்டுக்கு பிறகு இத் தொழிலில் நேரிடையாக சில லட்சம் ஜனங்களுக்கே வேலை கொடுக்க முடிகிறது. (சுமார் 7½ லட்சம்) இப்பொழுது 'திறமைப்படுத்தல்' (Rationalization) என்ற பெயரால் தனது இயந்திரங்களை புதுப்பித்து, இன்னும் சில லட்சம் பஞ்சாலைத் தொழிலாளர்களை வேலை இழக்கச் செய்ய முயற்சி செய்யப்பட்டு வருகிறது. சமீபத்தில் பெரும் கைத்தொழில்களையும், சர்க்காரின் பெரும் திட்டங்களையும் ஆதரித்துவரும் இந்திய பொதுவுடமை கட்சியின் மத்திய கமிட்டிகூட மில்களில் "திறமைப்படுத்தல்" (Rationalization) பெயரால் வேலையில்லாத் திண்டாட்டத்தை பரப்புவதை கண்டித்து நமது அடிப்படை கொள்கையை ஊர்ஜிதப்படுத்தியிருப்பதானது ஆச்சரியத்தையும், சந்தோஷத்தையும் அளிக்கிறது. இத்தொழில் நடைபெற அதிகம் மூலதனம் தேவை என்பதற்காக இதை நடத்தும் அதிபர்கள் சர்க்கார் வரிகளை எதிர்த்து கிளர்ச்சி செய்கிறுர்கள். இத்தொழிலையே தேசியமயமாக்கி விட்டால் என்ன செய்வது என்ற பயமும் ஒரு பக்கம் தோன்றியுள்ளது.

அனைவரின் மேன்மையைக்கோரும் ஆட்சிமுறை

தேசம் விடுதலை பெற்றபின் அதன் லட்சியம் "சர்வோதய ஆட்சிமுறை" அல்லது "அனைவரின் மேன்மையே." தொழிலதிபர்கள் இதன் லட்சணங்களை நன்கு புரிந்துள்ளதாகவே தெரியவில்லை. இன்று சமூகத்தில் பலவிதமான சக்திகள் அதை சீர்திருத்தமுயற்சி செய்து வருகின்றன. அவைகளை மறந்துவிடக்கூடாது. தொழில் நுட்பங்களை பயன்படுத்துவது அவசியம் என்பதை ஒப்புக் கொண்டாலும் அவ்வாறு செய்வதினுல் சமூகத்தில் தோன்றக்கூடிய கொந்தளிப்புகளை புறக்கணிக்க முடியாது. ஆகையால் சாத்யமானவரை அதிக மக்களுக்கு வேலையளிக்கும் பொருட்டு, கதர் கிராமக் கைத்தொழில்களை ஊக்கமளித்து வளர்த்து வருவது அவசியம் என்று நமது பிரதமர் திரு நேருஜியே கூறுகிறுர்.

மில்களா? குடிசைத்தொழில்களா?

திரு பிர்லா அவர்களும் குடிசைத்தொழில்களைப்பற்றி குறிப்பிட்டுவிட்டு கீழ்க்கண்ட விதம் கூறினுர்.

'நாம் அனைவரும் குடிசைத் தொழில்களை காப்பாற்ற வேண்டும் என்றுதான் விரும்புகிறேம்? ஆனுல் நாம் நமது பெரிய இயந்திரத் தொழில்களை அழித்துவிட்டு அவைகளுக்கு பதிலாக குடிசைத் தொழில்களை கடைபிடிப்போமா? என்பதே கேள்வி"

திரு பிர்லாவின் முதலாவது கேள்விக்கு அவருடைய இரண்டாம் கேள்வியே பதிலளிக்கிறது. அந்நியர் நலனுக்கும், இந்தியர் நலனுக்கும் இருந்த போராட்டம் போய் சுதந்திர இந்தியாவில் இன்று குடிசைத் தொழிலுக்கும், இயந்திர தொழிலுக்கும் போராட்டமாக மாறி இருப்பதாகவே அவர் கூறுவதின் பொருளாக தொனிக்கிறது.

மில்களுக்கு ஒரு புதுமுறையில் ஆபத்து

சாமர்த்திய சாலிகளான மில் முதலாளிகள் தமது ஆதிக்கத்திற்கு "குடிசைத் தொழில்கள்" என்று மற்றெரு முனையிலும் எதிர்ப்பு வளர்ந்து வருவதை சமாளிக்க வேண்டியிருக்கும் என்று உணருவதையே இது பிரதிபலிக்கிறது.

வேலையில்லா திண்டாட்டம்

ஆனுல் மக்கள் நலத்தை கருதும் எந்த சர்க்காரும் வேலையில்லா திண்டாட்டத்தை சமாளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமலிருப்பது சாத்தியமில்லை. கைத்தறித் தொழிலையும், கைராட்டை, இதர கிராமக் கைத்தொழில்களையும் புத்துயிரளிப்பதற்காகவே சர்க்கார் பல நடவடிக்கைகளையும் சென்ற ஆண்டுமுதல் எடுத்து வருகிறது.

இந்தியர் நலன்—குடிசைத்தொழில்கள்

இந்தியாவின் இயந்திரத் தொழிலதிபர்கள் தேசத்தின் பெரும்பாலோர் க்ஷேம நலனைக்கருதி, பெரும்பகுதியினர்களின் வேலையில்லா திண்டாட்டத்தை நீக்கக்கூடிய கிராமக் கைத்தொழில்களை வளர்ப்பதே சுதந்திர இந்தியாவில் "இந்தியர்கள் நலன்" என்று ஒப்புக்கொள்ளுவார்கள் என்று நம்புகிறேம்!!

— என். எஸ். சுப்பிரமணியம்

(61-ம் பக்கத் தொடர்ச்சி) "இமயத்தின் அழைப்பு"

களும் அவளுடைய நோய் தீர்க்க மருத்துவமோ, மருந்தோ முற்றிலும் தேடுவதில்லை. இந்த நோய் வாய்ப்பட்ட மனைவியின் உடல்நிலை சீர்படும் பொருட்டு செலவழிக்கும் பொருளிருந்தால் இவளுக்கு பதில் புதிதாக ஒரு ஸ்திரீயையே கொண்டு வந்துவிடலாமே? என்று அவர்கள் கூறிவந்தனர். பக்கத்திலமர்ந்திருந்த அவள் கணவர்களும் இதை ஒப்புக்கொண்டனர்.

ஆடு மாடுகளைக் காட்டிலும் தாழ்வு

உண்மையிலேயே மருந்து வாங்கும் சிறு தொகைகளைக் கொண்டு, ஆடுமாடுகளை வாங்குவது போல், ஸ்திரீகளின் வியாபாரம் நடைபெறும் இடத்தில் அந்த ஏழை அடிமையின் உடல் நலனைப் பற்றியும், ஆரோக்யத்தைப் பாதுகாப்பது பற்றியும் ஏன் சிந்தனை செய்ய வேண்டும்?

உழைத்து உதவியும் அடிமை!

இது சிந்தனைக்குரிய விஷயம். எங்கும் ஸ்திரீகளின் தாழ்மைக்கு அவர்களுடைய பொருளாதார அடிமைத்தனமே காரணம் என்று காண்கிறோம். ஆனால் இந்த இமய பர்வத புத்திரிகள் பூரண சுயதேவைப்பூர்த்தி மட்டுமல்ல, தமது உழைப்பால் தங்கள் குடும்பத்தையே பராமரிக்கும் சக்திவாய்ந்தவர்களாயிருந்தும், ஆடுமாடுகளிலும் தாழ்வுற்று ஏன் தங்கள் வாழ்நாளை சோகத்தில் ஆழ்த்துகிறார்கள் என்பதைப் பற்றி சிறிது யோசனை செய்யுங்கள்!!

அந்த பெண்மணி "நாகதாத்"திலிருந்து மருந்து வாங்கிவந்து குணமடைந்து சொஸ்தமானபொழுதிலும், இன்றும் இமயப் பிரதேசத்தில் எண்ணற்ற பெண்கள் இதே நிர்கதியான நிலையில் வாழ்க்கையை துன்பத்திலாழ்த்தி துடித்துவருகின்றனர். அவர்களுடைய மனமுடைந்த கண்ணீர் காட்டாறுகளில் ஓடி பெருவெள்ளமாக மாறுகிறது.

ஒருபுறம் இந்த வேதனையின் அலைகடல் இமயத்தின் சாரல் பூராவிலும் எழுகின்றது. மறுபுறம்:

டில்லியில் வந்த லேடி டாக்டர்

டில்லியில் காந்தியடிகளிடம் ஒரு நாள் ஒரு லேடி டாக்டர் தனது கணவனோடு வந்தாள். ஏதோ வேலை தேடவே வந்தாள். அவளை இமயப் பிரதேசத்தில் சேவை செய்யும்படி காந்தியடிகள் வேண்டினார். அவள் வேலை செய்யவேண்டிய இடம் 60 மைல் மோட்டாரில் சென்றபிறகு 16 மைல் கால்நடையாக செல்லவேண்டும் என்று கேள்விப்பட்ட உடனே அவள் கைகூப்பி தொழுது டில்லியிலேயே ஏதாவது ஒரு வேலை வேண்டுமென்று கூறலானாள்.

வேலைக்கு லாயக்கற்ற நாகரீகப் பெண்மணிகள்

அந்த நவநாகரீக பெண்மணியின் தற்கால நாகரீக கல்வியறிவையும், அதன் உபயோகத்தையும் பார்த்து காந்தியடிகளின் மனம் விம்மியது. அவர் கூறினார், "(கஸ்தூரி)பாவும் இதே மாதிரி படித்திருந்தால் அவளும் எனது, அல்லது தேசத்தின் ஒரு வேலைக்கும் தகுதியற்றவளாகியிருப்பாள்!!"

இன்னமொரு பெண்ணின் கதை

வேறு ஒரு சகோதரி தன் தந்தை சொற்படி என்னுடன் வேலை செய்ய வந்தாள். நானும் அவளுக்கு இயன்ற அளவு சௌகரியங்கள் செய்து கொடுக்கவும் முயன்றேன். ஒரு நாள் நாங்கள் பக்கத்திலுள்ள ஒரு கிராமத்தில் நடமாட முடியாத ஒரு நோயாளி ஸ்திரீயை பார்வையிடச் சென்றோம். அவள்கூட நடந்துவந்தாள். அங்கு அந்த நோயாளியை பார்வையிட்டாள். ஆனால் திரும்புகையில் அவளுக்கு கால்நடையாகச் செல்வது மிகவும் கடினமாகிவிட்டது. ஒரு கல்லின் மீதமர்ந்து விம்மி விம்மி அழுதாள். இதைப் பார்த்து கிராம ஜனங்களும் கூடிவிட்டனர். சகோதரியின் கஷ்டத்தை குறைக்கும் பொருட்டு குதிரையும் கொண்டுவந்தனர். அவளை தனது தங்கும் இடம் சேர்ப்பிக்கவும் உதவினார்கள். ஆனால் இமயப் பிரதேசத்தில் சேவை செய்வதற்கு ஏற்படும் இம்மாதிரி சோதனைகளை தாங்க அவள் மனம் இடம் கொடுக்காமல் திரும்பிவிட்டாள்.

இமயகுமாரிகளுக்கு இதே கதிதானா?

இமயத்தின் பெண்மணிகள் அனுபவிக்கும் துன்பம் தீர்க்க யாராவது முன்வரவேண்டும் என்பது ஒருபக்கம். மறுபக்கம் தேசத்தின் படித்த பெண்மணிகள், தொண்டு செய்யத் தகுந்த இந்த கடினமான பிரதேசத்தில் வேலை செய்ய விரும்புவதில்லை!! இந்த இமய குமாரிகளின் கதி இதேதானா? தேசத்தில் அவர்கள்பால் யாருக்கும் இரக்கமில்லையா?

நம்பிக்கை

ஆனால் நான் கஸ்தூரிபா கேந்திரத்தில் பயின்றுவரும் சேவிகைகளை பார்க்கும்பொழுது சிறிது நம்பிக்கை பிறக்கிறது.

6-2-54 — ஸ்ரீ தர்மதேவ சாஸ்திரி

உழைத்துண்க; மற்றெல்லாம் அடிமை வாழ்வே !!

எங்கும், என்றும், ஒளி

உலகெங்கும், என்றென்றும் குறை நிறைந்த சமூகத்தின் இன்னல்களைத் தீர்க்க மகாபுருஷர்கள் தோன்றி வந்துள்ளார்கள், தோன்றி வருகிறார்கள் தோன்றி வருவார்கள். சத்தியம், ஞானம், கடவுள் இவை அழிவில்லாதவை. இவைகளின் கஜானா என்றும் காலியானதில்லை. நமது கஜானா தான் எப்பொழுதும் காலியாக இருக்கும். நாம் அடிக்கடி குறுகிய மனோபாவனை யுடையவர்களாகிவிடுகிறோம். கடவுள் அருளிருந்தால் வேறு ஒன்றுக்கும் குறை ஏற்படுவதில்லை. சில சமயங்களில் இது குறைபடும் பொழுது, அதைப் பூர்த்தி செய்யும் பொருட்டு மகா புருஷர்கள் தோன்றுகின்றனர்.

அழியாமல் தப்ப அள்ளிக்கொடுங்கள்

நம் நாட்டுப் பெரியவர்கள் பரம்பரை மிகவும் புராதனமானதும், இணையற்றதுமாகும். காந்தியடிகள் தோன்றினர். அவரும் சமூகத்திற்கு அளித்த படிப்பினை இதுவே, "கொடுங்கள் — கொடுங்கள். அள்ளிக்கொடாமல் சமூகம் நிலை பெறாது!!" இன்று வினோபாஜியும் இதையே தான் கூறி வருகிறார்.

கதரும்—தீண்டாமையகற்றலும்

காந்தியடிகளின் வேலைத் திட்டத்திலிருந்து இரண்டு விஷயங்களை எடுத்துக்கொள்ளுங்கள்—"கதர்—தீண்டாமை அகற்றல்." உழைப்பிலிருந்து தப்புவதற்கு எப்பொழுது வழி வகுக்கப்பட்டதோ, அப்பொழுதே தீண்டாமை உதயமாயிற்று. சமூகத்தில் எவன் பெரிய திருடனாகிறானோ அவன்தான் சமூகத்தின் பெரியோனாவதற்கு சேஷ்டை செய்கிறான். எவன் உடமைகள் திருடப்படுகிறதோ, அவன் தீண்டாதவனாக ஒதுக்கப்படுகிறான்!!

உழைப்பிலிருந்து தப்பித்துக்கொள்வதும், தீண்டாமை நோயை சமூகத்தில் பரப்புவதும், ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்களே!

கைகள் வேலையை மூளை செய்யமுடியாது

படித்தவர்கள் மூளையால் வேலை செய்வதாக வாதாடுகிறார்கள். ஆனால் ஜீவனோபாயம் தேடிக் கொள்வதற்காகத்தான் கடவுள் இரு கைகளைத் தந்துள்ளார். பிறருக்கு உதவி செய்யவே மூளையைத் தந்துள்ளார். வக்கீல், டாக்டர், பேராசிரியர் முதலியவர்களிடத்தில் புத்தி சக்தியிருந்தால் அதை அவர்கள் தமது எளிய சகோதரர்களின் சேவைக்காக ஈடுபடுத்தட்டும். புத்தி சக்தி பிரம்மரஸம்! அதைவிற்பனை செய்வது கொடுமை. புத்தி சக்தியினால் யாராகிலும் தமது வாழ்க்கைத் தேவைகளைத் தேடிக்கொள்வதினால் தவறில்லை. ஆனால் புத்தி சக்தியினால் தன் பணப் பெட்டியை நிரப்புவதற்கு முயலுவதினால் அனர்த்தம் விளையும்.

பணப்பித்து ஒழியவேண்டும்

சமூகத்தில் பணப்பெட்டியை நிரப்பும் மனோபாவம் வளர்ந்து வந்து, உழைப்பிலிருந்து தப்புவதற்கு உபாயங்கள் தேடிப் பெருக்கப்பட்ட பொழுதெல்லாம் சமூகத்தில் மகான்கள் தோன்றி, புத்தி சக்தியை பரோபகாரத்திற்காக ஈடுபடுத்தும் படி தன் வாழ்க்கை மூலமே விளக்கி வந்துள்ளார்கள்.

கபீரும்—திருவள்ளுவரும்

கபீர் தோன்றினார். அவர் கையினால் தொழில் செய்துகொண்டே பரம்பொருளை யடையலாம் என்பதை தெளிவுபடுத்தினார். (நம் நாட்டு பெருந்தகையார் திருவள்ளுவரும், அறுபத்திமூவரும் இங்ஙனம் தோன்றியவர்களே.)

தேவைக்கதிகம் உற்பத்தி!

"தேவைக்கதிகமாக உற்பத்தியானால் என்ன செய்வது?" என்று சிலர் கேட்கின்றனர் "பங்கிடு செய்துவிடு" என்பதுதான் பதில். கையினால் மிகுந்த முயற்சியோடு உழைப்பதினால் ஒருபொழுதும் இப்படி அதிக உற்பத்தி ஆகிவிடாது. லட்சக் கணக்கிலும், கோடிக் கணக்கிலும் பொருள் குவிப்பது புத்தியின் துருபயோகத்தால்தான் ஏற்படும்.

செயல்பட்டு உதவுதல்

கையால் செய்; புத்தியால் உதவு; என்று பல மகான்கள் கூறியுள்ளனர். வாழ்க்கை நடத்த கைகள்; பிறருக்கு உதவ புத்தி; இந்த சிறு கோட்பாடு மீறப்படும்பொழுது மீண்டும் மகான்கள் தோன்றுகின்றனர். எத்தனை பேர்களை ஞாபகப் படுத்துவது. ஒருவரைக் காட்டிலும் மற்றவர் சிறந்து இருக்கிறார். துகாராம், ஏகநாத், சைதன்யர், குருநானக், கபீர், துளசிதாஸ், வள்ளுவர், இளங்கோ, கம்பர், ராமகிருஷ்ணர், விவேகாநந்தர், திலகர், காந்தியடிகள்.........?

கதரின் லட்சியம்

காந்தியடிகள் இந்த உடலுழைப்பையும், புத்தியையும் பற்றி விளக்குகையில்தான் கதர் தத்துவம் உதயமாயிற்று. உழைப்பினால் உண்க! உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற ஏற்றத் தாழ்வுகளை மறந்திடுக! இதுவே கதர்!"

தீண்டாமைப்பேய் இன்னமும் அகலவில்லை!

தீண்டாமைப் பேய் அகன்றுவிட்டதாகச் சொல்வதற்கில்லை. நமது அரசியல் சட்டம் மூலம் சட்ட ரீதியில் தீண்டாமை ஒழிந்தது. ஆனால் மக்கள் மனதிலிருந்து அது ஒழிய வில்லை. நண்பர்கள் கூறுகின்றனர் 'பெண்கள் ஒப்புக்கொள்ள வில்லை' என்று. பெண்கள் தீண்டாமையை கைவிடுவதில்லை என்கின்றனர். நீங்கள் அந்த களங்கத்தை கைவிட்டு தலைமுழுகிவிடுங்கள் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன், சட்டத்தினாலோ, சர்க்காராலோ அந்த வேலை நடைபெற முடியாது. அது மக்கள் மன மாற்றத்தால்தான் ஏற்படமுடியும்.

கஸ்தூரிபா கிராமம்,
23—1—'54. — ஸ்ரீ வியோகிஹரி

சர்வ சேவா சங்கம்

1) சென்ற பல வருடங்களாக சர்வ சேவா சங்கத்தின் பொதுக் காரியதரிசியாக இருந்துகொண்டு, தேசமெங்கும் பூமிதான யாத்திரை செய்து, சர்வோதய லட்சியங்களுக்காக இடைவிடாது முயற்சித்து வந்த, ஸ்ரீ சங்கர் ராவ் தேவ் அவர்கள் தனது காரியதரிசிப் பதவியை ராஜினாமா செய்துவிட்டார்.

2) அவருக்குப் பதில் ஸ்ரீ அண்ணாசாகேப் சகஸ்ரபுத்தே பொதுக் காரியதரிசியாகவும், ஸ்ரீ வல்லபஸ்வாமி கூட்டுக் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

3) முன்னாள் அகில பாரத சர்க்கா சங்கத்தின் தலைவராக இருந்த ஸ்ரீ தீரேந்திர மஜும்தார் சர்வ சேவா சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

4) சர்வசேவா சங்கத்தின் தலைமைக் காரியாலயம் தற்சமயம் சேவா கிராமத்திலிருப்பதை புத்தகயாவிற்கு மாற்றப்படுவது பற்றி ஆலோசனை நடந்துவருகிறது.

5) சர்வ சேவா சங்கத்துடன் இணையாது, தனித்து இயங்கிவந்த, ஹிந்துஸ்தானி தாலிமி சங்கம் சர்வ சேவா சங்கத்தில் இணைந்துவிடுவதென்று தீர்மானிக்கப்பட்டது.

6) சர்வ சேவா சங்கத்தில் ஸ்ரீ இக்கண்டவாரியார், ஸ்ரீ ச. ஜெகந்நாதன், ஸ்ரீ நா. ராமஸ்வாமி ஸ்ரீ ப. நம்மாழ்வார் முதலியோர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

— வி. துரைராஜன்

திருப்பூர் வட்டகையில் புதிய பரிசிரமாலயம்

திருப்பூர் வட்டகையின் காங்கயம் கிளை சுற்று வட்டாரத்தில், காசிலிங்கம்பாளையத்தில் நடைபெற்று வந்த நூற்பு, நெசவுப் பயிற்சிசாலையை அதில் பயின்றுவந்த மாணவர்களிடையே ஒப்புவிக்கப்பட்டுவிட்டது.

புதிதாக முதலிபாளையம் கிராமம், பிள்ளையார் பாளையம் என்ற மஜ்ராவில், ஒரு நூற்பு நெசவுப் பயிற்சிசாலை ஆரம்பிக்க பூர்வாங்க ஏற்பாடுகள் நடந்து வருகிறது.

அ. முத்துசாமி

(இந்தப் பத்திரிகை கையினால் செய்த காகிதத்தில் அச்சிடப்பட்டது.)

'இந்த இதழில்

மறந்துபோன தமிழகத் தியாகியின் மறைவு	61
இமயத்தின் அழைப்பு	61
பஞ்சாலைத் தொழிலின் இரண்டாம் நூற்றாண்டு	62
உழைத்துண்க; மற்றெல்லாம் அடிமை வாழ்வே	63
சர்வ சேவா சங்கம்	64

"கிராமோதயம்" சந்தாவிபரம்:- தனிப்பிரதி 0-1-0 வருட சந்தா ரூ. 1-8-0 அகில பாரத சர்க்கா சங்கக் கிளைகளில் கிடைக்கும்.

Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.